அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 329

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7

19 மே, 1986.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,

**இளைப்பாறியதன் பின்னர் மீண்டும் சேவையில் அமர்த்தப் பட்ட உத்தியோகத்தர்களுக்கான லீவு - புதிய தாபனக் கோவை - அத்தியாயம் - XII**

---

கீழ்க்காணுமாறு 37-ஆம் பிரிவைச் சேர்த்துக் கொள்க.

37. இளைப்பாறியதன் பின்னர் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்ட உத்தியோகத்தரின் லீவு.

37:1 இளைப்பாறியதன் பின்னர் மீண்டும் சேவையில் அமர்த்தப்படும் ஓர் உத்தியோகத்தருக்கு,

37:1:1 சேவையில் இடைநிறுத்தம் இன்றி மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டால்,

(i) மீண்டும் சேவையில் அமர்த்தப்படும் பஞ்சாங்க வருடம் பற்றிய வகையில் மீண்டும் சேவையில் அமர்த்தப்படுவதற்கு முன்னர் வகித்த பதவியில் எஞ்சியுள்ள லீவும்.

(ii) அதற்குப் பிந்திய பஞ்சாங்க வருடம் பற்றிய வகையில் தமது பதவிக்கு உரிய லீவும் வழங்கப் படலாம்.

37:1:2 சேவையில் இடைநிறுத்தம் ஏற்பட்டு மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டிருந்தால்,

(i) மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்ட கால எல்லை சம்பந்தமாக மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்ட பஞ்சாங்க வருடத்தில் பதவிக்குரிய வீத அளவான லீவும்.

(ii) அதற்குப் பிந்திய பஞ்சாங்க வருடம் பற்றிய வகையில் வகிக்கும் பதவிக்குரிய லீவும் வழங்கப் படலாம்.

ஒப்பம்: டி. பி. ஜ. பி. எஸ். சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.